# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் அமெரிக்காவிலுள்ள பைத்துல் ஹமீது பள்ளிவாயிலில் 10.05.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அஹ்மதிய்யத் உலகில் வெற்றி பெற்று விடும் இன்சா அல்லாஹுத்தஆலா என்பது நமது வாதமாகும். அஹ்மதிய்யத் இஸ்லாத்தை விட்டும் வேறுபட்ட ஒன்றல்ல. உண்மையிலேயே உண்மையான இஸ்லாம் தான் அஹ்மதிய்யத் அல்லது அஹ்மதிய்யத்தே உண்மையான இஸ்லாமாகும். நமது எதிரிகள் எவ்வளவுதான் அஹ்மதிகள் முஸ்லிம்களே அல்ல என்று கூச்சலிட்டுக் கூறினாலும் அல்லாஹ்வின் செயலளவிலான சாட்சியம், ஒட்டுமொத்த ஜமாஅத்துடன் ஒவ்வொரு நொடியும் இருந்து வருவது இறைவன் நம்முடன் இருக்கின்றான் என்ற ஆறுதலை நமக்கு வழங்குகிறது. மேலும் உலகிற்கு உண்மையான இஸ்லாமிய போதனை எங்காவது கிடைக்க முடியும் என்றால், அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர் மூலமாகவே கிடைக்க முடியும். அது இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அல்லாஹ் நியமித்துள்ள காலத்தின் இமாமும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மூலமாகவே கிடைக்க முடியும் அல்லது எவர் இஸ்லாத்திற்கு புத்துயிர் அளிப்பதற்காக இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளாரோ அவர் மூலமாகவே அது கிடைக்கும்.

எனவே, முஸ்லிம் நாடுகளாக இருந்தாலும் சரி அல்லது இஸ்லாம் அல்லாத நாடுகளாக இருந்தாலும் சரி உண்மையான இஸ்லாமிய தூதுச் செய்தியை உலகிற்கு வழங்குவதை அல்லாஹ்வுத்தஆலா இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரின் மூலமாகவே விதித்திருக்கின்றான். இன்றில்லையென்றால் நாளை அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்களே உண்மையான முஸ்லிம்கள் என்பதையும், அதுதான் உண்மையில் இஸ்லாத்தின் பிரதிநிதியாகத் திகழும் ஜமாஅத் என்பதையும் உலகம் அறிந்து கொள்ளும்.

இரண்டு நாட்களுக்கு முன் ‘லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்’ என்ற நாளிதழின் நிரூபர் என்னைச் சந்திக்க வந்திருந்தார். அவர் நீங்கள் அமெரிக்காவில் மிகவும் சொற்பமான எண்ணிக்கையில் இருக்கின்றீர்கள். மக்களுக்கு உங்களைப் பற்றி தெரியவேயில்லை. பிறகு உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தி என நீங்கள் வாதம் செய்து கூறுகின்ற இந்த அஹ்மதியத்தின் தூதுச் செய்தியை எவ்வாறு இந்த நாட்டில் பரப்பப் போகின்றீர்கள்? என்று கேள்வி கேட்டார். நான் அவரிடம் அமெரிக்காவில் மட்டுமல்ல. முழு உலகிலும் நாங்கள் ஒருநாள் உங்களது அல்லது உங்கள் சந்ததிகளின் உள்ளங்களை வென்று அவர்களை இஸ்லாத்தின் மடியில் அமர வைப்போம் இன்சா அல்லாஹுத்தஆலா என்று கூறினேன். நான் கூறிய இந்த விசயத்தை வேறு விதமாக அவர்கள் எழுதிவிடக் கூடாதே என்று நான் நினைத்தேன். ஆனால், இன்று நான் ஜுமுஆவிற்கு வருவதற்கு முன்னர் அவருடைய நேர்காணல் பற்றிய அறிக்கையை படித்தேன். அதில் அவர் ஏறக்குறைய நான் கூறிய எல்லா விசயங்களையும் சரியாகவே குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் அல்லாஹ்வின் விதி எவ்வாறு நபிமார்களுக்கு தனது ஆதரவையும், உதவியையும் வழங்குகிறதோ அவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹுடனும் அவனது வாக்குறுதிகள் இருக்கின்றன. நான் ஏற்கனவே கூறியது போன்றே அல்லாஹ்வின் செயலளவிலான சாட்சியம் ஒவ்வொரு நொடியும் நமக்கு இந்தக் காட்சியைக் காட்டி வருகின்றது.

திருக்குர்ஆனின் சொற்களான كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِيْ *நானும் எனது தூதரும் வெற்றி பெறுவோம் (58:22)* என்பதை அல்லாஹ் முடிவெடுத்து விட்டான் என்ற அவனது வாக்குறுதியை அவன் எவ்வாறு, எப்போதும் உண்மைப்படுத்திக் காட்டி வந்துள்ளானோ அவ்வாறே இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவன் இந்த வாக்குறுதியை செய்திருப்பதாலும் இதே சொற்கள் மூலம்

அன்னாருக்கு ஆறுதல் வழங்கியிருப்பதாலும், இதுபற்றி இல்ஹாம் மூலம் அவர்களுக்கு தெரிவித்திருப்பதாலும் இந்த அவனது வாக்குறுதியையும் கண்டிப்பாக அவன் உண்மைப்படுத்திக் காட்டுவான் என்பதில் நமக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள்தான் திருக்குர்ஆனின் போதனைகளை உலகில் பரப்புவதற்கு அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, தனது மார்க்கத்தை பரப்புவதற்காக தன்னால் நியமிக்கப்பட்ட இறை தூதருக்கு இறைவன் தனது ஆதரவையும் உதவியையும் வழங்காமல் இருப்பது சாத்தியமற்றதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் தொன்றுதொட்டே இதை எழுதி விட்டான். மேலும் அதனை அவன் தனது சட்டமாகவும் நடைமுறையாகவும் ஆக்கியுள்ளான். அதாவது அவனும் அவனது தூதரும் எப்போதும் வெற்றி பெறுவர். நான் அவனது தூதராக அதாவது அவனால் அனுப்பப்பட்டவனாக இருக்கின்றேன். ஆனால், எந்த புதிய சரீஅத்துடனும், புதிய வாதத்துடனும், புதிய பெயருடனும் நான் வரவில்லை. மாறாக, அந்த நபியே கரீம் காத்தமுல் அன்பியா அவர்களின் பெயரைப் பெற்று அவர்களிலிருந்தே அவர்களின் தோற்றமாக நான் வந்துள்ளேன். எனவே நான் கூறுகின்றேன். எவ்வாறு தொன்றுதொட்டே ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை எப்போதும் இந்த வசனத்தின் கருத்து உண்மையாகி இருக்கின்றதோ அவ்வாறே இப்போதும் எனக்காக அது உண்மையுடன் வெளிப்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த மக்கள் முகம் திருப்பிச் சென்று விடுவதன் மூலமாக இறைவனின் உண்மையான நாட்டத்தைத் தடுத்து நிறுத்தி விடுவார்களா? ஒருபோதும் இல்லை. ஆரம்பத்திலிருந்தே எல்லா நபிமார்களும் இதற்கு சாட்சி பகர்ந்து வந்துள்ளனர். இறைவனின் வாக்குறுதி விரைவில் உண்மையானதாக ஆகப் போகிறது. அது كَتَبَ اللّٰهُ لَأَغْلِبَنَّ أَنَا وَرُسُلِي என்ற வாக்குறுதியாகும்.

அல்லாஹ்வின் அருளால் எனக்கு இதுபற்றி அணு அளவு கூட சந்தேகம் இல்லை. மேலும் எந்த ஓர் அஹ்மதிக்கும் இப்படிப்பட்ட சந்தேகம் இருக்க முடியாது. அதாவது நவூதுபில்லாஹ் ஜமாஅத் ஏதாவதொரு சமயத்தில் அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதிலிருந்தும் விலகிவிடும் அல்லது இந்த வெற்றி கிடைக்காது என்று கருத முடியாது. இங்கு இந்த வெற்றி என்றால் என்ன? என்பது பற்றி ஒவ்வொரு அஹ்மதிக்கும் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும். என்ன! அரசாங்கங்களை கைப்பற்றுவது தான் இந்த வெற்றியா? அல்லது ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிகள் பெரும்பாலான எண்ணிக்கையில் இருப்பதுதான் இந்த வெற்றியா? இதுவும் வெற்றியின் ஒரு வகையாகும். ஆனால் வெற்றி என்பது இரண்டு வகையில் இருக்கும். இரு வழிகளில் அது ஏற்படும் என்பது அல்லாஹ்வின் நடைமுறையாகும். அந்த வெற்றியின் ஒரு பகுதி இறைவனது நபியின் காலத்தில் ஏற்படும். நபியின் மூலமாக அது ஏற்படும். இரண்டாவது நபியின் காலத்திற்குப் பிறகு நபியின் போதனையைப் பரப்புவதன் மூலமாக அந்த வெற்றி ஏற்படும். ஆனால் அது நபியின் காலத்திற்குப் பிறகே ஏற்படுகின்றது.

**இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு விளக்கிக் கூறியுள்ளார்கள்:**

இறைவனது அத்தாட்சிகள் பூமியில் நிறைவேறி விடும். அதை எவராலும் எதிர்த்து நிற்க முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்வாறே இறைவன் வல்லமைமிக்க அடையாளங்கள் மூலம் அவர்களது உண்மையை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். எந்த நேர்மையை அவர்கள் (அதாவது நபிமார்கள்) பரப்ப விரும்புகின்றனரோ அதற்கான விதையை அவர்களது கையாலேயே அவன் விதைக்கின்றான்.

எனவே நபியின் மூலமாக கிடைக்கும் வெற்றி என்பது இறைவனின் இருப்பு பற்றி உலகிற்கு தெரிய வருவதாகும். இறைவன் இருக்கின்றான் என்பது தெரிய வருகின்றது. நபி வழங்குகின்ற இந்த ஆதாரங்களும் தெளிவுகளும் இறைவனது குறிப்பான உதவியின் மூலமாகத்தான் அவருக்கு கிடைத்துள்ளது என்பது உலகிற்கு தெரிய வரும். நபியின் அறிவு மற்றும் அவருக்கு கிடைக்கின்ற இறைஞானத்தை எவரும் எதிர்த்து நிற்க முடியாது. பிறகு அவரது உண்மை வெளிப்படும் வகையிலுள்ள அடையாளங்கள் அவருக்காக வெளிப்படுகின்றன. நபிமார்களது எதிரிகள் அவர்களை எதிர்ப்பதில் முன்னேறிக் கொண்டே செல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆதாரங்களையும் அடையாளங்களையும் அவர்கள் பொய்யப்படுத்த முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது எதிரிகள் பிடிவாதத்துடன் இருந்தனர். தங்களது மூதாதையர்களின் செயல்முறைக்கேற்ப வாழ்வைக் கழிக்க விரும்பினர். அவர்களிடம் அதற்கான எந்த ஆதாரமும் இருக்கவில்லை. பிடிவாதமும் மறுக்கும் இயல்பும் அவர்களிடம் இருந்தது. இவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள ஆதாரங்கள், தெளிவுகள் ஆகியவற்றை அவர்களது காலத்திலும் எவராலும் மறுக்க முடியவில்லை. இன்றும் மறுக்க முடியவில்லை.

இவ்வாறே அடையாளங்களும் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்பட்டன. முதலில் பெயர் தாங்கி ஆலிம்கள் இந்த அடையாளங்கள் தோன்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இது மஹ்தி மற்றும் மஸீஹின் வருகைக்கான அடையாளமாகும் என்றனர். பிறகு இந்த கிரகணங்கள் ஏற்பட்டவுடன் அதற்கு விளக்கம் கூற ஆரம்பித்தனர். பிறகு பூகம்பங்களின் அடையாளங்கள் வெளிப்பட்டன. இதை தவிர எண்ணற்ற அடையாளங்கள் உள்ளன. எவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களோ அவர்கள் இறுதி வரை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஆனால் நல்லியல்புள்ள மக்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். நபி, தான் விதைக்க வேண்டிய விதையை விதைத்து விடுகின்றனர். எந்த உண்மையான போதனைகளை அவர் உலகிற்குக் கூற வேண்டியது இருந்ததோ அதை அவர் கூறி விடுகின்றார். காலம் செல்லச் செல்ல அது தனது தாக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும் இறைவன் செய்த வாக்குறுதிக்கேற்ப நிகழ்ந்தது. அவர்களால் தூவப்பட்ட அந்த விதை செழிப்பான கதிர்களாக வெளிப்பட்டன. வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இது வெற்றியின் ஒரு வகையாகும்.

அவர்களது காலத்தில் சில இலட்சம் மக்கள் அவர்களது கைகளில் பைஅத் செய்தனர். ஆனால் இந்த வெற்றியின் மூலமாக அல்லாஹ்வின் எண்ணற்ற அடையாளங்கள் அவர்களுக்கு ஆதாரவாக வெளிப்பட்டன. அறிவிலும் ஆன்மீகத்திலும் அவர்களை யாரும் எதிர்த்து நிற்க முடியவில்லை.

பிறகு வெற்றியின் இரண்டாவது பகுதி, நான் ஏற்கனவே கூறியதைப் போன்றே நபியின் மரணத்திற்குப் பிறகு ஆரம்பமாகிறது. உண்மையில் இதுவும் கூட நபியின் ஆதாரங்களும் இறைவனின் அடையாளங்களும் வெளிப்படுகின்ற ஒரு தொடரேயாகும். ஆனால் இது நபியின் வாழ்நாளுக்குப் பிறகு வெளிப்படுகின்றது. நபி வஃபாத் ஆகி விட்டார் அல்லது எவர் வாதம் புரிந்தாரோ அவர் இறந்து விட்டார். எவர் ஜமாஅத்தை ஏற்படுத்தினாரோ அவர் இந்த உலகை விட்டுச் சென்று விட்டார். இப்போது நாம் மீண்டும் அவரால் தோற்றுவிக்கப்பட்ட ஜமாஅத்தை நமக்கு கீழ் கொண்டு வந்து விடலாம். அவர்களை நம்முடன் இணைத்துக் கொள்ளலாம் என்று எதிரிகள் கருதுகின்றனர். இந்த ஜமாஅத்தில் இணைந்திருப்பவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுத்துகின்ற எண்ணங்களைப் பரப்பி ஜமாஅத்தை விட்டும் விலக்கி விடலாம். ஏனென்றால் இப்போது இவர்களைப் பாதுகாக்கக் கூடியவர்கள் யாருமே இல்லை என்று அவர்கள் நினைக்கின்றனர். நபிக்கு தற்காலிகமாகக் கிடைத்த வெற்றி அதன் முடிவை எட்டி விடும் என்பது எதிரிகளின் எண்ணமாக இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எதிரிகளும் இவ்வாறே நினைத்தனர்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக நமக்கு முதலிலேயே கூறி விட்டார்கள். அதாவது முன்னர் வந்த நபிமார்களுக்கு கிடைத்த வெற்றி போன்றே எனக்கு கிடைத்த வெற்றியும்

இருக்கும். இறைவனது வாக்குறுதி நிறைவேறும் வரை அந்த வெற்றிகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் மரணித்து விட்டாலும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் தூவிய விதைகள் செழித்து வளர்கின்ற மரங்களின் ஒரு தொடர்ச்சியாக ஆக வேண்டியது இருக்கின்றது. அது இறைவனின் இரண்டாவது வல்லமைமிக்க தோற்றமான கிலாஃபத் மூலம் நிலைத்திருக்கும். அதன் மூலம் வெற்றிக்கான வாக்குறுதி நிறைவேறிக் கொண்டே இருக்கும். எனவே எவ்வாறு வெற்றியின் ஒரு பகுதி நபியின் காலத்திலும் இன்னொரு பகுதி அவர்களது வாழ்நாளுக்குப் பிறகும் ஏற்படுகின்றதோ அவ்வாறே அஹ்மதிய்யா ஜமாஅத், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்யப்பட்ட வாக்குறுதியின் இரண்டாவது பகுதி நிறைவேறி இருப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் கூறியது போன்றே சந்தேகமின்றி ஜமாஅத்திற்கு முன்னேற்றமும் வெற்றியும் கிடைக்கும். அது எண்ணிக்கையின் அடிப்படையிலும் அமையும். இப்போதும் அவ்வாறு ஏற்படுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால் இது தொடர்பாக நமக்கு இருக்கின்ற பொறுப்புகள் பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது தலைமுறை தலைமுறையாக நாம் இந்த வெற்றியில் பங்கேற்பவர்களாக ஆக முடியும் என்பதைப் பற்றி அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த பொறுப்புகள் திருக்குர்ஆன் நமக்குக் கூறியுள்ள பொறுப்புகளேயாகும். அதாவது இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். உங்களது நஃப்ஸை சீர்திருத்துங்கள். உங்களது ஆன்மீக நல்லொழுக்க நிலைமைகளை ஆய்வு செய்து பாருங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த தூதுச் செய்தியையும் இந்த பிரச்சாரத்தையும் முழுமையாக நிறைவேற்றுங்கள். அவர்கள் தமது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு உலகில் ஏக இறைவனின் ஆட்சியை நிலைநாட்ட வந்தார்கள். உலகை இறைவனுக்கு இணை வைப்பதிலிருந்தும் தூய்மைப்படுத்துவதற்காக வந்தார்கள்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

பூமியின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற அந்த எல்லா ஆன்மாக்களையும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள நல்லியல்பு கொண்ட மக்களை ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்துக் கொண்டு வந்து தனது அடியார்களை ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்றுசேர்ப்பதையே இறைவன் விரும்புகின்றான். இதுவே இறவைனின் நோக்கமாகும். அதற்காகவே நான் உலகில் அனுப்பப்பட்டுள்ளேன்.

எனவே நீங்கள் இந்த நோக்கத்தைப் பின்பற்றிச் செல்லுங்கள். ஆனால் மென்மையை மேற்கொள்வது, நல்லொழுக்கத்தை மேற்கொள்வது, துஆக்கள் செய்வதில் வலிமையைக் காட்டுவது ஆகியவற்றால் இதை செய்ய வேண்டும். உலகை ஏகத்துவத்தில் நிலைபெறச் செய்வதற்கும் ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்றுசேர்ப்பதற்கும் எந்த விசயங்கள் தேவையோ அவற்றில் ஒன்று தப்லீக் ஆகும். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதாகும். **இரண்டாவது,** நமது நல்லொழுக்கத்தை உயர்வான நிலைக்குக் கொண்டு செல்வதாகும். **மூன்றாவது,** துஆக்கள் செய்வதன் மூலம் இறைவனின் உதவியை வேண்டுவதாகும். இன்று ஒவ்வொரு அஹ்மதிக்கும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தன்னை தொடர்புபடுத்திக் கூறுகின்ற ஒவ்வொரு நபருக்கும் இந்தப் பொறுப்பை புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் மூலம் எந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்களோ அதை அடைவதற்குரிய ஒரு வழியாக நாம் ஆக முடியும். அடையாளங்களையும் தெளிவுகளையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். இன்று வரை இந்த அடையாளங்கள் மூலமாகவே நாம் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தைப் பார்க்கின்றோம். அல்லாஹ் ஜமாஅத்தின் மீது செய்துள்ள அருட்கொடைகள் ஆகியவற்றிற்கு எதிரில் நமது முயற்சிகளைப் பார்க்கும் போது அவை அவற்றில் ஆயிரத்தில், இலட்சத்தில் ஒரு பகுதியாகக் கூட இல்லை. ஆனால் இறைவன் நமது பொறுப்புகள் பற்றி நமக்கு கூறியுள்ளான். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். நம்மில் ஒவ்வொருவரும் இதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்தால் அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களது ஜமாஅத்தின் நன்கு செயல்படுகின்ற ஒரு அங்கமாக இருப்பதனால் கிடைக்கக்கூடிய இறை அருள்களுக்கு வாரிசாக முடியாது. நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

கனிகள் நமது முயற்சியால் கிடைப்பதில்லை என்பதில் சந்தேகமில்லை. அருட்கொடைகள் நமது முயற்சியால் கிடைக்காது. இவை முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருள்களாகும். தனது அன்பர்களை எப்போதும் கருத்தில் கொள்கின்ற அந்த அல்லாஹ்வின் அருள்களாகும். அவன் தனது குறிப்பான அனுமதியுடன் ஒருவரை நிற்க வைக்கும் போது அவருடன் அவன் செய்த வாக்குறுதிகளை வியப்பூட்டும் வகையில் நிறைவேற்றி எதிரியை இழிவடையும்படி செய்து விடுகின்றான். முன்னேற்றத்தின் புதிய புதிய இலக்குகளை அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரது ஜமாஅத் கடந்து சென்று கொண்டே இருக்கின்றது. ஆனால் நான் கூறியது போன்றே முயற்சி செய்வதற்கு நமக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. அல்லாஹுத்தஆலா இவ்வாறு முயற்சி செய்பவர்களது சிறப்பம்சங்கள் பற்றி திருக்குர்ஆனின் பல இடங்களில் எடுத்துக் கூறியுள்ளான்.

**ஓரிடத்தில் அதுபற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

وَمَنْ أَحْسَنُ قَوْلًا مِّمَّن دَعَا إِلَى اللَّهِ وَعَمِلَ صَالِحًا وَقَالَ إِنَّنِي مِنَ الْمُسْلِمِينَ ﴿٣٤﴾

*அல்லாஹ்வின்பால் மக்களை அழைத்து, நல்ல செயல்களைச் செய்து, நிச்சயமாக நான் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவர்களைச் சேர்ந்தவனாவேன் எனக் கூறுபவரை விடவும் மிகச் சிறந்ததனைக் கூறுபவன் எவன்? (41:34)*

இந்த விசயங்கள் அதாவது அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது, தப்லீக் செய்வது, தமது செயல்களின் பக்கம் தமது பார்வையைச் செலுத்துவது, நல்ல செயல்களைச் செய்வது, அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பது, தனது ஆற்றல்கள், தகுதிகள் ஆகியவற்றிற்கேற்ப இந்த உரிமைகளை நிறைவேற்றுவது ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும். தமது செயல்களின் மீது பார்வையைச் செலுத்தியவாறு அவற்றை இறைவனது போதனைக்கேற்ப வடிவமைத்துக் கொள்ளாதவரை தப்லீகில் வெற்றி பெற முடியாது. பிறகு இந்த விசயங்களை நிறைவேற்றுவதில் இறைவனது திருப்தி கிடைக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளாத வரை வெற்றி பெற முடியாது.

ஓர் அஹ்மதி தான் கலந்து கொள்கின்ற கூட்டங்களிலும் மாநாடுகளிலும் நான் மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் வழங்குவேன் என்று உறுதிமொழி எடுக்கும் போது அதை முழுமையாக நிறைவேற்றுவதும் அவசியமானதாகும். அப்போது தான் நமது முன்மாதிரியைப் பார்த்து உலகம் நம் பக்கம் கவனம் செலுத்தும். கலீஃபாக்கள் உலகிற்கு இத்தகைய சவால்களை விடுத்துக் கொண்டிருந்த போது, அல்லது இப்போது அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து அவர்களுக்கு இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் சோர்வின்றி தொடர்ந்து பணியாற்ற வேண்டும். ஒருநாள் உலகின் உள்ளத்தை வென்று அவர்களை இஸ்லாத்தின் மடியில் அமர வைப்போம் என்று நான் கூறுகின்ற போது நற்செயல்களைப் பேணும் அழகுடன் இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்தவாறு ஜமாஅத் சகோதரர்களின் ஆன்மீக முன்னேற்றத்தின் தரம் நிலைத்திருக்கும் என்பது மட்டுமின்றி அது மேலும் மேலும் சிறந்து விளங்கும் என்ற நல்லெண்ணத்துடன் தான் அதை நான் கூறுகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியையும் அன்னாரது பிரச்சாரத்தையும் அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பிறருக்கு எட்ட வைப்பார்கள் என்ற எண்ணத்துடன் கூறுகின்றேன். உங்களில் ஒரு பிரிவினர் மார்க்க அறிவை பெறுபவர்களாகவும் மார்க்கத்தை நன்கு சிந்தித்து புரியக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை தம்முடைய சமுதாயங்களுக்கும் உலகுக்கும் எட்ட வைத்துக் கொண்டே செல்ல வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

ஆனால் அந்த நேரத்தில் நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும் என்ற கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் நம்மிடம் முபல்லிக்குகள் குறைவாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் தயாராகி வந்து பிறகு தப்லீக் பணிகளை முன்னோக்கிக் கொண்டு செல்கின்ற வரை நாம் காத்திருக்க முடியாது. தப்லீக் பணிகளை முன்னேற்றமடையச் செய்வதற்காக ஒவ்வொரு இடத்திலிருந்தும் ஒரு பிரிவினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் இறைவனின் தூதுச் செய்தியை மேலும் பரப்புவார்கள். அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு நாட்டிலும் ஜமாஅத் சகோதரர்களில் இத்தகைய ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்களுக்கு தப்லீக் செய்வதில் ஆர்வம் இருக்கின்றது. இதற்காக அவர்கள் நேரத்தையும் ஒதுக்குகின்றார்கள். அமெரிக்காவிலும் இத்தகைய மக்கள் இருக்கின்றார்கள். அமெரிக்காவில் பொருளாதார சீர்குலைவின் பிடியின் மக்கள் இருப்பதால் அவர்கள் அதிகமாக பணிகளைச் செய்ய வேண்டியதுள்ளது என்று கூறப்படுகிறது. இதன் காரணமாக உலகத்தை சம்பாதிப்பதன் பக்கம் அதிகம் கவனம் செலுத்தப்படுகின்றது என்று கூறுகின்றார்கள். ஆனால் நான் பார்த்தேன். அல்லாஹ்வின் அருளால் இங்கும் ஒரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் தருவோம் என்ற தமது உறுதிமொழிக்கேற்ப எவ்வளவு சிறந்த முறையில் செயல்படுகின்றனர் என்றால் அதைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட சிலரும் என்னைச் சந்தித்தனர். அவர்கள் சிறிய கடைகளை வைத்துள்ளனர். ஸ்டால்களை நடத்துகின்றனர். அந்த ஸ்டால்களில் அவர்கள் தப்லீக் பணியையும் தொடர்ந்து செய்து வருகின்றனர். அந்த ஸ்டால்களையும் கூட அவர்கள் தப்லீகிற்குரிய ஒரு வழியாக ஆக்கியுள்ளனர். பிரசுரங்கள் கிடைப்பதில்லை என்று அவர்கள் முதலில் புகார் செய்திருந்தனர். இப்போது இந்த பகுதியில் உள்ளவர்களுக்காக ஸ்பேனிஷ் மொழியில் எங்களுக்கு பிரசுரங்கள் கிடைக்கின்றன என்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இந்த தப்லீக் களத்தில் பிரசுரங்கள் மூலமாக விரிவான நிலை ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு மிக விரைவாக ஸ்பேனிஷ் மொழி பேசுகின்ற மார்க்க அறிவுள்ள முபல்லிக்குகள் தேவை என்பது அவர்களது கோரிக்கையாகும். இதற்காக அவர்களது உள்ளத்தில் துடிப்பும் ஆர்வமும் இருக்கின்றது. ஜமாஅத் தனது வசதிக்கேற்ப இன்சா அல்லாஹுத்தஆலா முபல்லிக்கை நியமிப்பதற்கான முயற்சிகளைச் செய்கின்றது. ஆனால் ஜமாஅத்துகளும் இந்த அளவு கோரிக்கை வைக்கும் போது அவர்களது தங்களது குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோரிடம் அவர்கள் மார்க்கக் கல்வியைக் கற்பதற்காக ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்வதற்கு முன்வரும் வகையிலுள்ள ஆன்மாவை அவர்களிடம் உருவாக்க வேண்டும். அதன் மூலம் இங்குள்ள உள்ளூர் சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் மொழிக்கேற்ப அப்பகுதியில் உள்ளவர்களுக்கு தூதுச் செய்தியை எட்ட வைப்பவர்கள் அவர்களுக்கு கிடைக்க முடியும். இந்த தப்லீக் செய்வதற்கான ஆர்வமும் எழுச்சியும் இங்குள்ள பழைய அஹ்மதிகள் மற்றும் பெரியவர்களிடம் மட்டும் இல்லை. மாறாக இத்தகைய உணர்வை சில இளைஞர்களிடமும் நான் பார்த்தேன்.

இந்தப் பகுதியிலுள்ள ஒரு புதிய அஹ்மதி என்னை சந்திக்க வந்திருந்தார். அவர் மிகவும் உணர்வுடன் காணப்பட்டார். ஸ்பேனிஷ் இனத்தைச் சார்ந்த Bay Point area –ல் வசிக்கும் இவர் இந்த மக்களுக்கு எவ்வாறு அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது? என்ற பேரார்வம் அவரிடம் இருந்தது. அதுவும் விரைவாக அதை எட்ட வைக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. பைபிளில் 40 சதவீதம் பகுதியை நான் மனனம் செய்துள்ளேன். இப்போது திருக்குர்ஆனில் உள்ள ஆதாரங்களை நான் மனனம் செய்கின்றேன் என்று அவர் என்னிடம் கூறினார். இதில் பழைய அஹ்மதிகளுக்கும் தூதுச் செய்தி இருக்கின்றது. ஆனால் அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. திருக்குர்ஆனிலுள்ள ஆதாரங்களை நான் மனனம் செய்கின்றேன். தப்லீக் செய்கின்றேன் என்று அவர் கூறினார். இப்போது கிறிஸ்தவத்தை விட்டும் மக்கள் விலகிச் செல்கின்றனர். ஆனால் அவர்கள் மதத்தை விட்டும் இறைவனை விட்டும் விலகிச் செல்லவில்லை என்று இவர் கூறுகின்றார். அவர்கள் இறைவனைத் தேடுகின்றனர். எனவே இந்தக் காலி இடத்தை நிரப்புவதற்காக நாம் முன் வர வேண்டும். அவர்களுக்கு உண்மையான மார்க்கத்தைப் புரிய வைப்பதற்காகவும் அவர்களை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்கும் அதிகமாக தப்லீக் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் இதன் பக்கம் கவனம் ஏற்பட்டது. மிசனரி இன்சார்ஜ் சாஹிபிடமும் நான் இதுபற்றி விரிவாகப் பேசியிருக்கின்றேன்.

இதற்கான திட்டத்தை உருவாக்குங்கள் என்று கூறியிருந்தேன். அமீர் சாஹிப் அவர்களிடமும் இதுபற்றி கூறியிருந்தேன். கிளை அமைப்புகளும் ஜமாஅத் அமைப்புடன் இணைந்து இதற்காக முயற்சி செய்தால், தற்காலிக வக்ஃபிற்கான திட்டங்களை உருவாக்கினால், எந்தப் பகுதிகளில் களம் நமக்கு சாதகமாக இருக்கின்றதோ அங்கு அதிகமாக பணிகளைச் செய்தால் குறைந்தது ஒருமுறை இங்குள்ள ஸ்பேனிஷ் மக்களுக்கு அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாம் தொடர்பான அறிமுகம் கிடைத்து விடும். இதை செய்வது மிகவும் அவசியமானதாகும். கோரிக்கைகள் எந்த அளவு அதிகமாக ஆகிவிட்டதென்றால் இப்போது நாம் எப்படி நம்மை அறிமுகம் செய்வது என்ற கவலை நமக்கு இல்லை. இறைவன் ஏற்படுத்தியுள்ள வழிகளைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது.

அமெரிக்காவில் மட்டுமல்லாமல் தென் அமெரிக்காவிலுள்ள நாடுகளிலும் கூட தப்லீக் விரிவடைந்துள்ளது. Gotemalla –வைச் சேர்ந்த ஓர் அஹ்மதி இங்கு வந்துள்ளார். மிகவும் உணர்வுள்ள தாயி இலல்லாஹ்வாக அவர் இருக்கின்றார். எங்களுக்கு முபல்லிக்குகளைத் தாருங்கள். பிரசுரங்களைத் தாருங்கள். உள்ளூர் ஸ்பேனிஷ் மொழிக்கேற்ப இந்த தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார். ஏனென்றால் இவர்கள் பேசுகின்ற ஸ்பேனிஷ் மொழிக்கும் ஸ்பெயினில் பேசப்படும் ஸ்பேனிஷ் மொழிக்கும் சில இடங்களில் சில சொற்களில் மிகுதியான வித்தியாசம் காணப்படுகிறது. நமது பிரசுரங்கள் பொதுவாக ஸ்பெயினில் தான் தயாராகின்றன. நான் அவரிடம் ஸ்பெயின் பக்கம் கவனம் செலுத்தப்படுகிறது. அங்குள்ள பிரசுரங்களை தற்சமயம் பயன்படுத்துங்கள் என்று கூறியதும் 40 மில்லியன் மக்கள் வாழ்கின்ற அந்த இடத்தைப் பற்றி மட்டுமே நீங்கள் கவலைப்படுகிறீர்களா? இங்கு 400 மில்லியன் மக்கள் ஸ்பேனிஷ் மொழி பேசுபவர்களாக இருக்கின்றார்கள். அவர்களைப் பற்றி உங்களுக்கு கவலை இல்லையா? என்று அவர் என்னிடம் கேட்டார். இவர்கள் தான் உண்மையில் சிறந்த ஊழியர்களாகவும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பவர் –களாகவும் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களைத் தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். இப்போது இறைவனின் விதி நமக்கு சாதகமான பூமியை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது என்று தோன்றுகிறது.

அமெரிக்காவிலும் அதற்கு பக்கத்திலுள்ள நாடுகளிலும் இத்தகு சூழல் உருவாகி இருக்கின்றது. அல்லாஹுத்தஆலா காற்றை வீசச் செய்துள்ளான். கலிஃபோர்னியாவில் ஸ்பேனிஷ் மக்கள் பெரும்பான்மை –யினராக உள்ளனர் என்று கூறப்படுகிறது. வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்களுக்கு மார்க்கத்தில் ஈடுபாடு இருப்பது போன்றும் தெரிகிறது. ஆனால் இப்போது அவர்கள் உண்மையான மார்க்கத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். எனவே இந்த பகுதிக்காக குறிப்பான ஒரு திட்டம் இருக்க வேண்டும். இங்கு இருப்பவர்கள் தங்களது பொறுப்பை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இப்போது உங்களிடம் இருக்கின்ற பிரசுரங்களைப் பயன்படுத்துங்கள். அதிலிருந்தும் பலனைப் பெறுங்கள். மேலும் விரைவாக இங்குள்ள மொழிக்கேற்பவும் பிரசுரங்களைத் தயாரிப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

இங்கு அஹ்மதிய்யத்திற்காக களம் விரிவாக இருக்கின்றது என்ற எனது எண்ணம் மேலும் வலுவானதற்குக் காரணம் நமது முபல்லிக் அஸார் ஹனீஃப் சாஹிப் அவர்களது ஒரு கடிதம் இங்கு வருவதற்கு சில நாட்களுக்கு முன்பு என் பார்வைக்கு வந்தது. அதில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒரு கனவு பற்றி அவர் எழுதியிருந்தார். இதனை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது ஒரு குத்பா பேருரையில் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் கடிதம் இப்போது எனக்கு முன்னால் இல்லையென்றாலும், எனக்கு நினைவிருக்கின்றவரை அவர்கள் கண்ட கனவு இதுவாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது கனவில் கடலைப் போன்று அலை மோதுகின்ற மக்களின் பெரும் கூட்டத்தைப் பார்த்தார்கள். அம்மக்கள் அஹ்மதிகளாயிருந்தனர். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் கூறுகின்றார்கள்: அம்மக்களுள்ள பகுதியான லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதி போன்று தெரிகிறது என்றார்கள்.

எனவே நாம் முயற்சி செய்தால் நம்மில் ஒவ்வொருவரும் இந்த முயற்சியில் ஈடுபட்டு மக்களும் அதற்காக முயற்சி செய்யும் போதுதான் உண்மையான புரட்சி ஏற்படும் அல்லது விரைவில் அதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்து விடும். அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்துள்ள வெற்றி பற்றிய வாக்குறுதியை நிறைவேற்றுவான் என்பது நிச்சயமாக இறைவனின் விதியாகும். ஆனால் நாம் இந்த வாக்குறுதி நிறைவேறுவதில் பங்கேற்பவர்களாக ஆக விரும்பினால் பிறகு இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் தங்களது சிந்தனையின் ஓட்டத்தை அல்லாஹ்வின் விதிக்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். சிலர் இதற்கு மாற்றமான சிந்தனை உடையவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களது இந்த சிந்தனை அவர்களது குறைந்த தைரியத்தின் காரணமாகவே இருக்கின்றது. அதாவது இவர்கள் உலகவாதிகளாக இருக்கின்றனர். இவர்களுக்கு மார்க்கத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று இவர்கள் நினைக்கின்றனர். பௌதீக அளவில் பார்க்கும் போது இங்கு பெரிய Film Industries இருக்கின்றன. இங்கு உலக சிந்தனை மேலோங்கி இருக்கின்றது. இவையெல்லாம் இருக்கின்றது என்பது சரிதான். ஆனால் ஒரு மிகப்பெரிய பிரிவினர் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். எந்த அளவு நான் சிந்திக்கின்றேனோ அந்த அளவு அமெரிக்காவில் அஹ்மதிய்யத்தின் புரட்சி இந்தப் பகுதியிலிருந்துதான் தோன்றும் என்ற உறுதி எனது உள்ளத்தில் வலுவாக பதிந்து கொண்டே செல்கிறது.

எனவே நாம் நமது பலவீனங்களை இவர்களது தோள்களில் சுமத்தி விட்டு சாக்குப்போக்குகளைத் தேடுபவர்களாக இருக்கக் கூடாது. எங்கு ஜமாஅத் அமைப்பு ஒரு குறிப்பான முயற்சிகளைச் செய்ய வேண்டுமோ அல்லது நிகழ்ச்சி ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்தால் அதை செயல்படுத்த வேண்டுமோ அங்கு கிளை அமைப்புகளும் இப்பணியில் ஈடுபட வேண்டும். ஆனால் இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் இதை செய்ய வேண்டும். இந்த மாநிலத்தில் உள்ள அஹ்மதிகள் மட்டுமல்ல. மாறாக முழு நாட்டிலும் உள்ள அஹ்மதிகளுக்கும் இதில் பொறுப்பு இருக்கின்றது. அவர் செய்துள்ள பைஅத் உடன்படிக்கை இந்த பொறுப்பை அவர் மீது சுமத்துகின்றது. அதாவது அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களது பொறுப்புகள் தொடர்பாக அல்லாஹ் கூறியுள்ளது அதாவது பொருத்தமான நற்செயல்களைச் செய்வது முழுமையான கட்டுப்படுதலை வெளிப்படுத்திக் காட்டுவது ஆகியவற்றின் பக்கமும் அவர் கவனம் செலுத்த வேண்டும். இதை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது எப்படி நடக்கும்? இதற்காக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பக்கம் நமது பார்வையைச் செலுத்த வேண்டும். அவர்கள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றார்கள்? அவர்கள் நம்மை எப்படி பார்க்க விரும்புகின்றார்கள்? என்று நாம் பார்க்க வேண்டும்.

நாங்கள் உலகவாதிகளாக இருக்கின்றோம். நாங்கள் பலவீனமுள்ளவர்களாக இருக்கின்றோம். எனவே நாங்கள் பைஅத் செய்திருப்பதே போதுமானதாகும் என்று கூறிவிடுவதால் மட்டும் இறைவன் முன்னிலையில் பதில் சொல்வதிலிருந்தும் நாம் தப்பி விட முடியாது. மற்ற முஸ்லிம்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அஹ்மதி முஸ்லிம்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருப்பதன் மூலம் சிறந்த நிலைமையில் இருக்கின்றனர். நபியை மறுப்பதால் ஏற்படும் பாவத்திலிருந்தும் அவர்கள் தப்பித்து விட்டனர். ஆனால் முன்னேற்றத்தின் இலக்குகளைக் கடந்து செல்வதற்கான உண்மையான நம்பிக்கையாளராக இருக்கின்றார். அவர்கள் நாங்கள் முஸ்லிம்ளாக இருக்கின்றோம் என்ற நிலையிலிருந்து வெளியேறி ஈமானில் முன்னேற்றத்தை அடைய முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். வெளிப்படையான முறையில் கட்டுப்படுவதிலிருந்தும் வெளியேறி முழுமையாக கட்டுப்படுகின்ற நிலையைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். இங்கு பல அஹ்மதிகள் இவ்வாறும் உள்ளனர். அவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவர்களது மூதாதையர்களின் காலத்திலிருந்தே இருக்கின்றது. அந்தப் பெரியவர்கள் அஸ்லம்னா என்ற நிலையிலிருந்து மிகவும் முன்னேறிச் சென்று ஆமன்னா நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம் என்பதற்கான காட்சிகளை நமக்கு காட்டி இருக்கின்றார்கள். வியக்கத்தக்க தியாகங்களை அவர்கள் செய்துள்ளனர். எனவே அவர்களது தியாகங்களுக்கும் விருப்பங் –களுக்கும் கண்ணியமளிப்பதும் அவர்களது சந்ததிகள் மீது கடமையாக இருக்கின்றது. அவர்களது விருப்பத்திற்கு நீங்கள் கண்ணியம் அளிக்கும் போது அவர்களது துஆக்களும் நீங்கள் வாரிசாகி விடுவீர்கள். எனவே இங்கு வசிக்கின்ற

பழைய அஹ்மதிகள் இவ்வகையில் தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அதாவது அவர்கள் தமது பெரியவர்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும்.

இதை தவிர இங்குள்ள ஜமாஅத் சகோதரர்களில் இப்படிப்பட்ட ஒரு பிரிவினரும் உள்ளனர். அவர்கள் கடந்த சில வருடங்களாக இங்கு வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்த நாட்டில் அவர்களுக்கு மிக இக்கட்டான நிலைமைகள் ஏற்பட்டது மட்டுமே இதற்கான காரணமாக இருக்கின்றது. இங்கு மேற்கத்திய நாடுகள் அல்லது மேற்கத்திய நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் அதில் அமெரிக்காவும் அடங்கும். அஹ்மதி என்ற முறையில் அவர்களது நாட்டில் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படாமல் இருப்பதால் மட்டுமே இவர்களுக்கு தங்களது நாட்டில் குடியுரிமை வழங்கி தங்களுடன் இணைத்துக் கொண்டனர். அந்த மக்களுக்கு அவர்களது நாட்டில் குடியுரிமை மறுக்கப்பட்டது மட்டுமின்றி அவர்கள் அநீதியின் ஆட்டுரலில் அரைக்கப்படுகின்றனர்.

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர் என்ற காரணத்தினாலேயே நீங்கள் இங்கு வந்திருக்கின்றீர்கள். இந்த விசயம் நீங்கள் செயலளவிலான ஒரு அஹ்மதியாக இருப்பதன் முன்மாதிரியைக் காட்ட வேண்டும் என்பதை உங்களிடம் எதிர்பார்க்கின்றது. நான் மீண்டும் இதன் பக்கம் கவனமூட்டுகின்றேன். இங்கு Asylum Seeker – புகலிடம் தேடி வந்திருப்பவர்கள் அல்லது Refugee. எனவே அகதிகளாக வந்திருப்பவர்கள் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பதால் கவலையுடன் இருக்கின்றனர். வேலையை அவர்கள் தேட வேண்டும். உங்களுக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரத்தில் பிரசுரங்களை எடுத்துக் கொண்டு வெளியே செல்லுங்கள். தப்லீகின் கடமைகளை நிறைவேற்றுங்கள். வீட்டில் அமர்வதன் மூலம் மேலும் மனச்சோர்வு ஏற்படும். அதிலிருந்து நீங்கள் தப்பி விடலாம். அதிலிருந்தும் நீங்கள் விடுதலை பெற்று விடுவீர்கள். பிறகு இதன் காரணமாக அல்லாஹ் உங்களது நிலைமையையும் சரிசெய்து விடலாம். இன்சா அல்லாஹுத்தஆலா சரிசெய்து விடுவான்.

இப்போது நான் சுருக்கமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எத்தகைய ஜமாஅத்தைப் பார்க்க விரும்புகின்றார்கள் என்பதை கூற விரும்புகின்றேன். முதல் விசயமாக அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் மீதுள்ள ஈமான் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே இந்த இயக்கம் நிறுவப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஈமான் நமக்கு ஆராய்ந்து பார்ப்பதன் மூலமாகவும் கவனமாக சிந்திப்பதன் மூலமாகவும் வளர்ச்சி அடைகின்றது என்பது திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிறது. எனவே அல்லாஹ்வின் மீதுள்ள ஈமானை நாம் வளர்ச்சியடையச் செய்வதற்கு எல்லாவற்றையும் விட முதலாவதாக அவனது வேதமான திருக்குர்ஆனை முறையாக ஓத வேண்டும். மேலும் அதைப் பற்றி சிந்தனை செய்ய வேண்டும். எந்த அளவு விரிவான நூல்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள் என்றால், அதைப் படிக்காமல் இருப்பதன் மூலம் நம்மை நாமே அதிலிருந்தும் விலக்கிக் கொள்கின்றோம். இவ்வாறு விலகி இருப்பதும் கூட ஈமானில் பலவீனம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது. எனவே இதன் பக்கமும் நாம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:** ஈமான் அடையாளங்கள் மூலமாகவும் வளர்ச்சி அடைகிறது.

அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு அடையாளமாக இல்ஹாம் மூலமாக உம்மிடம் மிகவும் தூரத்திலுள்ள இடங்களிலிருந்து மக்கள் அதிகமாக வருவார்கள் என்று கூறியிருந்தான். இந்தக் காட்சியை அவர்களது வாழ்நாளில் நாம் பார்த்தோம். வரலாறும் இப்படிப்பட்ட நிகழ்வுகளைப் பாதுகாத்து வைத்திருக்கின்றது. இது மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு நாட்டின் மாநாட்டிலும் இந்தக் காட்சிகளை நாம் பார்க்கின்றோம். இன்றும் இந்தக் காட்சியை நாம் பார்க்கின்றோம். நாட்டின் மிக தூரத்திலிருக்கும் பகுதிகளிலிருந்து ஜும்ஆ தொழுவதற்காக மட்டும் பயணத்தின் சிரமங்களைச் சகித்துக் கொண்டும் தமது செல்வத்தை செலவு செய்து கொண்டும் மக்கள் இங்கு வந்துள்ளனர். காலத்தின் கலீஃபா இங்கு வந்துள்ளார்கள் என்பதனால் மட்டுமே அவர்கள் இங்கு வந்துள்ளனர். இவையெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகத்தான் கிலாஃபத்துடன் அவர்களுக்கு தொடர்பு இருந்து வருகிறது. பார்க்கின்ற கண்கள் இதை பார்த்தால் சிந்தித்து உணருகின்ற உள்ளங்கள் இவ்விசயங்களை தங்கள் கண் முன்னால் வைத்திருந்தால் அதன் மூலம் அல்லாஹ்வின் இருப்பின் மீதும் அவர்களுக்கிருக்கும் ஈமான் மேலும் வலுவடைந்து கொண்டே செல்லும். பிறகு ஓர் உண்மையான அஹ்மதியின் அடையாளமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது அவர் அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அல்லாஹ்விடம் அவர் வைத்துள்ள நேசம் இன்னும் அதிகமாகி விடும் என்பதாகும்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் இந்த சமயத்தில் ஒரு உண்மையாளரை அனுப்பி வைத்து அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்துகின்ற ஒரு ஜமாஅத்தை உருவாக்க விரும்பியுள்ளான்.

எனவே நம்மில் ஒவ்வொருவரும் இது பற்றி ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது. அல்லாஹ்வின் மீதுள்ள அன்பில் நாம் எந்த அளவு முன்னேறியுள்ளோம் என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் நாம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ள நற்செயல்களை இறைவனது அன்பை பெறுவதற்காக நாம் செய்கின்றோமா? அக்கட்டளைகளை தேடி அறிந்து அவற்றை செயல்படுத்த நாம் முயற்சி செய்கின்றோமா? அவ்வாறு செய்யவில்லை என்றால் பிறகு நாம் அஸ்லம்னா நாங்கள் கட்டுப்பட்டவர்களாக உள்ளோம் என்ற வட்டத்தில்தான் இருக்கின்றோம். நாம் நமது ஈமானில் முன்னேற வேண்டும் என்பதை இறைவன் விரும்புகின்றான். நமது ஈமானில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என்றே அவர் விரும்புகின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு நன்றாகத் தெரியும். நாமும் நமது ஜமாஅத்தும் எந்நிலையில் இருந்தாலும் நாம் நேரான வழியில் செல்லும் போதுதான் இறைவனது ஆதரவும் உதவியும் நம்முடன் இருக்கும். மேலும் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகவும் உண்மையாகவும் பின்பற்றி திருக்குர்ஆனின் தூய்மையான போதனைகளை நமது செயல்முறையாக ஆக்கி இவ்விசயங்களை நமது செயல்கள் மூலம் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். வெறும் வாய்ப்பேச்சால் மட்டும் இது இருக்கக் கூடாது. நாம் இந்த வழிமுறையை கடைபிடித்தால் முழு உலகமும் ஒன்றுசேர்ந்து நம்மை அழிக்க நினைத்தாலும் அவர்கள் நம்மை அழிக்க முடியாது. ஏனென்றால் இறைவன் நம்முடன் இருப்பான். ஆனால் நாம் இறைவனுக்கு கீழ்படியாமல் இருந்து அவனுடன் உள்ள உறவை துண்டித்துக் கொள்பவர்களாக இருந்தால் நம்மை அழிப்பதற்கு யாரும் திட்டம் தீட்ட வேண்டிய அவசியம் இல்லை. எந்த எதிர்ப்பின் தேவையும் இல்லை. எல்லாவற்றையும் விட முதலாவதாக அவனே நம்மை அழித்து விடுவான்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் தக்வாவை கடைபிடிக்கவில்லை என்றால் இறைவன் விரும்புகின்ற அந்த நன்மைகளிலிருந்து பெரும் பங்கைப் பெறாமல் இருந்தால் அல்லாஹ் எல்லாரையும் விட முதலாவதாக உங்களை அழிப்பான். ஏனென்றால், நீங்கள் ஒரு உண்மையை ஏற்றுக் கொண்டு செயலளவில் அதை மறுக்கின்றீர்கள். நீங்கள் பைஅத் செய்து விட்டீர்கள் என்பதை மட்டும் நம்பி இருந்து விடாதீர்கள். அதில் கர்வம் கொள்ளாதீர்கள். முழுமையான தக்வாவை நீங்கள் கடைபிடிக்கவில்லை எனில் ஒருபோதும் நீங்கள் தப்பிக்க முடியாது.

இறைவனுக்கு எவருடனும் எந்த உறவும் இல்லை. எவருக்கும் சலுகை வழங்குவதை அவன் அனுமதிக்க மாட்டான். நமது எதிரிகளும் அவனால் படைக்கப்பட்டவர்களே நீங்களும் அவனுடைய படைப்பினங்களாக இருக்கின்றீர்கள். எதுவரை உங்களது சொல்லும் செயலும் ஒன்றாக இல்லையோ அதுவரை கொள்கை அளவிலுள்ள விசயங்கள் மட்டும் பயனளிக்காது.

பிறகு அவர்கள் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் தக்வாவில் முன்னேறுவது பற்றியும் நற்செயல்களைச் செய்வதன் பக்கம் கவனம் செலுத்துவது பற்றியும் துஆவிற்கான உரிமையைச் செலுத்துவது பற்றியும் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:

தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதில் மட்டும் எந்த சிறப்பும் இல்லை. நமது ஜமாஅத் இதுமட்டும் போதுமானது என்று இருந்து விடக் கூடாது. மாறாக, அவர்கள் இருவிதமான சிறப்புகளையும் பெற முயற்சி செய்ய வேண்டும். அதற்காக முயற்சி மற்றும் துஆவின் மூலம் பயன்பெற வேண்டும்.அதாவது தீமையிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்; நன்மைகளைச் செய்ய வேண்டும்.

மனிதன் இன்னொரு மனிதன் மீது தனது செயல் மூலம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றான். எனவே தான் உங்களது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே தான் அல்லாஹுத்தஆலா இறைவன் பக்கம் மக்களை அழைப்பவர்களுக்கு நற்செயல்களை செய்வதன் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மென்மையாக நடந்து கொள்ளுங்கள். இந்த இயக்கத்தின் உண்மையை உங்களது தூய்மையான உள்ளத்தின் மூலமாகவும் நல்ல முறையில் நடந்து கொள்வதன் மூலமாகவும் நிரூபித்துக் காட்டுங்கள். அது எனது போதனையாகும். இதை நினைவில் வையுங்கள்.

நமது அகமும் புறமும் ஒன்றாக இருக்கும் போதுதான் உலகத்தின் மீது ஜமாஅத்தின் உண்மை நிரூபிக்கப்படும். நமது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். நாம் புதிதாக வருபவர்களிடம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துக்கூறி அவர்களை இஸ்லாத்தில் இணைக்கின்ற போது பிறகு நாம் நிற, இன, சமுதாய பேதங்களை அழித்து சரியான இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப ஒவ்வொருவரையும் உங்களது சகோதரரைப் போன்று மார்போடு அணைத்துக் கொள்ள வேண்டும். உங்களது உறவினர்கள் போன்று அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் பல ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் அஹ்மதிகளானார்கள். அவர்களது சந்ததிகள் ஜமாஅத்தை விட்டும் விலகிச் சென்று விட்டனர். இதற்கான பல்வேறு காரணங்களில் ஒரு காரணம் பெரும்பான்மையாக இருந்த பாகிஸ்தான் அஹ்மதிகள் அவர்களை சரியாக அரவணைக்கவில்லை என்பதாகும். நான் கேட்கும் போது இத்தகைய புகார் கூறப்பட்டது. இஸ்லாத்தின் போதனைகளை அவர்களுக்கு கூறினார்கள். ஆனால் அதற்கேற்ப தங்களது செயல்களை அவர்கள் அமைத்துக் கொள்ளவில்லை. இது விலகிச் சென்றவர்களின் துர்பாக்கிய நிலையாகும். அவர்கள் தங்களது ஈமானைப் பாதுகாப்பதற்குப் பகரமாக மக்களின் பக்கம் தங்களது கவனத்தைச் செலுத்தியுள்ளார்கள். நபர்களை அவர்கள் பார்த்தார்கள். ஆனால் அவர்களது தடுமாற்றத்திற்கு காரணமாக இருந்தவர்களும் கூட இந்த துர்பாக்கிய நிலையில் பங்கு பெறுபவர்களாக ஆகி விட்டார்கள். எனவே இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

**இப்போது இறுதியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு மேற்கேளை எடுத்துக் கூறுகின்றேன்:**

அவர்கள் கூறுகின்றார்கள்: உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் பார்வையில் எவரது ஆடைகள் சிறந்ததாக இருக்கின்றதோ, எவர் செல்வந்தராகவும் வசதி படைத்தவராகவும் இருக்கின்றாரோ அவர்தான் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர் என்று ஒருபோதும் கருத வேண்டாம். மாறாக, உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள்தான் அல்லாஹ்வின் பார்வையில் அவனுக்கு மிகவும் பிரியமானவர்கள் ஆவர். அவர்கள் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே ஆகி விடுகின்றனர். நீங்கள் இந்த விசயத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதற்கு முன்னர் கூறிய விசயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டாம். அவன் செய்துள்ள வாக்குறுதிகளில் இந்த வாக்குறுதியும் இருக்கின்றது.

وَجَاعِلُ الَّذِينَ اتَّبَعُوكَ فَوْقَ الَّذِينَ كَفَرُوا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ

*உம்மைப் பின்பற்றுபவர்களை உம்மை மறுப்பவர்கள் மீது கியாமத் நாள் வரை மேலோங்கி இருக்கும்படி செய்வேன். (3:56)*

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது உண்மையாகும். அவன் என்னைப் பின்பற்றுபவர்களுக்கு என்னை மறுப்பவர்கள் மற்றும் எனது எதிரிகள் ஆகியோர் மீது வெற்றியை வழங்குவான். ஆனால் சிந்திக்க வேண்டிய விசயம் என்னவென்றால் எனது கைகளில் பைஅத் செய்த ஒவ்வொருவரும் என்னைப் பின்பற்றியவர்களைச் சார்ந்தவராக இருக்க மாட்டார். எதுவரை பின்பற்றுதலின் முழுமையான நிலையை அவர் தன்னிடம் உருவாக்கவில்லையோ அதுவரை அவர் என்னைப் பின்பற்றியவராக ஆக முடியாது. முழுமையான முறையில் என்னைப் பின்பற்றாத வரை அவர் இந்த தகுதியைப் பெற முடியாது. எவ்வாறு பின்பற்ற வேண்டுமென்றால் கட்டுப்படுவதில் அவர் தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும். எனது அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்ல வேண்டும். அதுவரை பின்பற்றுதல் என்ற சொல் அவருக்குப் பொருந்தாது. இதிலிருந்தும் அல்லாஹுத்தஆலா இப்படிப்பட்ட ஜமாஅத்தை எனக்காக விதித்துள்ளான் என்பது தெரிய வருகிறது. அந்த ஜமாஅத் எனக்கு கட்டுப்பட்டு நடப்பதில் தங்களை மாய்த்துக் கொள்வர். முழுமையான முறையில் அவர்கள் என்னைப் பின்பற்றுவர். இதன் மூலம் எனக்கு ஆறுதல் ஏற்படுகின்றது. எனது துக்கம் நம்பிக்கையாக மாறி விடுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தம்மை முழுமையாகப் பின்பற்றிச் செல்கின்ற ஜமாஅத்தை உருவாக்குகின்ற கவலை இருந்தது. இதனால் அவர்கள அமைதியிழந்து இருந்தார்கள். ஆனால் கியாமத் நாள் வரை அப்படிப்பட்ட மக்கள் பிறந்து கொண்டே இருப்பார்கள் என்று அல்லாஹ் அவர்களுக்கு வாக்குறுதி வழங்கி இருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் தனது அருளால் இவ்வாறு முழுமையாக அவர்களைப் பின்பற்றுகின்ற மக்களை அவர்களுக்கு வழங்கியுள்ளான். வழங்கி விடுகின்றான். ஆனால் நாம் நம்மைப் பற்றி கவலைப்பட வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விரும்பும் அந்த தரத்தை அடைபவர்ளாக ஆவோமாக! அல்லாஹ் இந்தத் தரத்தை பெறுவதற்கான தகுதியை நமக்கு வழங்குவானாக! அதன் மூலம் அஹ்மதிய்யத்தின் வெற்றியை நமது கண்கள் மூலம் பார்ப்பவர்களாக நாம் ஆக வேண்டும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-HAMEED MOSQUE, California, USA.

on **10.05.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456